தினமணி

சென்னை, 06 May 2013 03:00 AM IST

# கண் மருத்துவம் சார்ந்த படிப்புகளுக்கு பிரகாசமான எதிர்காலம்

கண் மருத்துவம் சார்ந்த படிப்புகளுக்கு பிரகாசமான எதிர்காலம் உள்ளது என சங்கர நேத்ராலயா சார்பில் நடைபெற்ற உயர்கல்வி ஆலோசனைக் கூட்டத்தில் டாக்டர் ஆர். கிருஷ்ணகுமார் தெரிவித்தார்.

சென்னை கல்லூரி சாலையில் உள்ள சங்கர நேத்ராலயா வளாகத்தில், பள்ளி இறுதித் தேர்வு முடித்தவர்களுக்கான உயர்கல்வி ஆலோசனை முகாம் ஞாயிற்றுக்கிழமை நடந்தது.

நிகழ்ச்சியில் சங்கர நேத்ராலயா கல்விப் பிரிவு அதிகாரி ஏ.மகாலிங்கம் வரவேற்றார்.

சங்கர நேத்ராலயா முன்னாள் மாணவர் சபரி ஸ்ரீநிவாசன், மருத்துவத்துறை சார்ந்த வேலைவாய்ப்பு குறித்து விளக்கினார்.

கண் மருத்துவ இயல் பள்ளி முதல்வர் டாக்டர் ஆர். கிருஷ்ணகுமார் கண் மருத்துவ இயல் படிப்பு குறித்து கூறியதாவது:

மருத்துவம் சார்ந்த அறிவியல் படிப்புகளுக்குச் சிறந்த எதிர்காலம் உள்ளது. குறிப்பாக கண் மருத்துவம் சார்ந்த படிப்புகளை முடித்தவர்களுக்கு ஏராளமான வேலைவாய்ப்பு உள்ளது. மிகக் குறைந்த செலவில் மருத்துவத்துறை சார்ந்த படிப்புகளை முடிக்கலாம்.

கண் மருத்துவம் என பொதுவாகக் குறிப்பிட்டாலும், நான்கு பிரதான பிரிவுகள் உள்ளன. இதில், இரண்டாண்டு டிப்ளமோ, நான்காண்டு பட்டப்படிப்புகள் உள்ளன. சங்கர நேத்ராலயாவில் வழங்கப்படும் நான்காண்டு பட்டப்படிப்பு பிட்ஸ் பிலானி பல்கலைக் கழகத்துடன் இணைந்து வழங்கப்படுகிறது.

இந்தியாவில் 42 சதவீதம் பேர், கண் பார்வைக் குறைபாடுகளுக்குக் கண்ணாடி அணியாமல் உள்ளனர். கண் மருத்துவம் சார்ந்த விழிப்பார்வை பரிசோதனைப் பிரிவில் 12 லட்சம் பேர் தேவைப்படுகின்றனர் என்றார்.

கண் மருத்துவ செவிலியர் உதவியாளருக்கான டிப்ளமோ படிப்பு மற்றும் அறுவைச் சிகிச்சை அரங்கு, மயக்க மருந்தியல் தொழில்நுட்பம் குறித்த டிப்ளமோ படிப்புகள் குறித்து செவிலியர் பிரிவு பேராசிரியர் ஹன்னா பிரியா விளக்கினார்.

பார்வைக் குறைபாடு தொடர்பான டிப்ளமோ படிப்பு குறித்து பேராசிரியர் சி.பவித்ரா விளக்கினார்.

மருத்துவ ஆய்வக தொழில்நுட்பம் குறித்த 3 ஆண்டு பி.எஸ்.சி படிப்பு குறித்து டாக்டர் கே. கோரல் விளக்கினார்.

சங்கர நேத்ராலயா அகாதெமி துணை மேலாளர் ஸ்ரீதேவி நன்றி கூறினார்.

நிகழ்ச்சியில் ஏராளமான மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் பங்கேற்றனர்.

http://dinamani.com/edition_chennai/chennai/2013/05/06/கண்-மருத்துவம்-சார்ந்த-படிப/article1576911.ece